பக்கங்கள், எட்டு

Registered as a Newspaper

26 OCT 1996
மாநகராட்சி மன்றம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 10 சனிக்கிழமை (26 10-1996) UTHAYAN A Lively Nationel Tamil Daily கதிர் 252

# அதிகாரப் பரவலாக்கல் நகல் சட்டம் ஏப்ரலில் நாடாளுமன்றத்துக்கு!

## ஜனவரி இறுதிக்குள் தெரிவுக்குழு அங்கீகாரம் வழங்கி விடுமாம்

கொழும்பு, ஒக்டோபர் 26

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் அடங்கிய சட்ட வரைபு அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அந்த நகல் திட்டத்தை இப்போது ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது அமர்வுகளை ஜனவரி இறுதிக்குள் அல்லது பெப்ரவரி முற்பகுதியில் முடித்து விடும், தீர்வுத் திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில் அதற்கு உரிய வடிவம் கொடுத்து விடும்.

இத்தகவல்களை அரசமைப்பு விவகார, நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தெரிவித்தார்.

தெரிவுக்குழு தனது அமர்வுகளை மேற்கூறிய கால எல்லைக்குள் முடித்து விடுவதற்காக நாடாளுமன்றம் கூடாத நாள்களிலும் தனது அமர்வுகளை நடத்தும். இது குறித்து அரசமைப்பு விவகாரம் சம்பந்தமாக ஆராய்ந்து வரும் தெரிவுக்குழு உறுப்பினர்கள் இணங்கித் தெரிவித்துள்ளனர் —

இனப் பிரச்சினைக்கான தீர்வு அவசியம் அதனை உணர்ந்தே தெரிவுக்குழு உறுப்பினர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர் — என்றும் அமைச்சர் பீரிஸ் சொன்னார்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்து பொது மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன;

ஏற்கனவே பதுளை மாவட்டத்தில் பொது மக்களுக்கான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அது மிகவும் வெற்றியளித்துள்ளது

தொடர்ந்து ஏனைய இடங்களிலும் அரசின் அதிகாரப் பரவல் திட்டம் குறித்துப் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படும்.

நாடாளுமன்றம், மக்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களைத் தாக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறினாரா?

### மறுப்புத் தெரிவித்து ஜனாதிபதி செயலகம் அறிக்கை

கொழும்பு ஒக், 26

பௌத்த வழிபாட்டு தலங்களைப் புலிகள் தாக்கினால் தமிழ் மக்களை தாமே நேரில் தாக்குவதாக ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் தெரிவித்தாரா?

ஜனாதிபதி அப்படிக் கூறவில்லை என்று மறுப்புத் தெரிவித்து ஜனாதிபதி செயலகம் நேற்று அறிக்கை விடுத்துள்ளது.

பௌத்த வழிபாட்டுத் தலங்களைப் புலிகள் தாக்குவார்களேயானால் தமிழ் மக்களைத் தாமே நேரில் தாக்குவதாக அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி கூறியதாக சிங்கள வார இதழ் ஒன்றை மேற்கோள்காட்டி வெளிநாட்டுப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

தாம் இத்தகைய அறிக்கையை விடுத்ததாகக் கூறப்படும் அதிகாரிகளின் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை என்று ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் என்றும் —

அவர் எவருக்கும் எந்த விதத்திலும் எந்தநேரத்திலும் இவ்வாறு கூறவில்லை என்றும் — ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இத்தகைய கூற்றுக்கள், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தமது அணுகுமுறைக்கு முற்றிலும் விரோ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கத்தோலிக்க மதகுருமார்களுக்கு நீர்கொழும்பு பகுதியில் பயமுறுத்தல்

கொழும்பு, ஒக். 26

நீர்கொழும்புப் பகுதியில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவந்த வன்முறைச் சம்பவங்கள், பயமுறுத்தல்கள் தற்போது கத்தோலிக்க குருமாருக்கு எதிராக திரும்பி உள்ளன என்று கூறப்படுகிறது.

நீர்கொழும்பு ரட்டோலுவ என்னும் இடத்தில் உள்ள புனித சிசிலியா தேவாலய குருவானவரான வண. அந்தோனி சிறிலுக்கு கடந்த சில தினங்களாக தொலைபேசியில் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தன.

இதன் பின்னர் அதிகாலை 2,00 மணி அளவில் தேவாலயத்துக்கு வானில் வந்த இனம் தெரியாத சிலர் குருமனையின் அழைப்பு மணியை அடித்தனர் இதில் சந்தேகமடைந்த குருவானவர் அந்த அதிகாலை நேரம் தேவாலய மணியை அடிக்கவே அயலவர்கள் எழும்பி வர முன்னர் வானில் வந்தவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

சீதுவ தேவாலயத்தைச் சேர்ந்த வண. [illegible] சிங்காவுக்கும் இப்படியான பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர் ஆர்ச். பிஷப் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவுக்கு முறையிட்டுள்ளார்.

நீர்கொழும்பு சென் மேரிஸ் தேவாலயக் குருவானவர் வண. ஜோ பலிஹவத்தனவும் ஒரு சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

அதிகாலை 2-00 மணி அளவில் [illegible] இனம் தெரியாத சிலர் வானுக்குள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படையினர் காடுகளில் தேடுதல்

கொழும்பு, ஒக். 26

பாணம, குமண காட்டுப் பகுதிகளில் அதிரடிப் படையினர் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் அதிக அளவில் நடமாடுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே அதிரடிப் படையினர் அனுப்பப்பட்டதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

கதிர்காமம், யால காட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் பாணம, குமண காட்டுப் பகுதிகளுக்குள் பிரவேசித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (இ-10)

## அம்பாறையில் தாக்குதல்

கொழும்பு, ஒக். 26

அம்பாறை மாவட்டத்தில் வக்கியல்ல என்ற இடத்தில் உள்ள பாதுகாப்பு நிலை ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் காலை தாக்குதல் நடத்தியதில் ஓர் ஊர்காவல் படை வீரரும் —

சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-4)

## புளொட் முகாம் மீது வவுனியாவில் தாக்குதல்

### சிவிலியன் உட்பட இருவர் பலி

கொழும்பு, ஒக். 26

நேற்று முன்தினம் இரவு வவுனியாவுக்கு அருகாமையிலுள்ள புளொட் முகாம் மீது இனந்தெரியாத இரு இளைஞர்கள் நடத்திய தாக்குதலில் ஒரு சிவிலியனும் புளொட் உறுப்பினரும் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

இந்த இளைஞர்கள் கைக்குண்டை வீசி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்று கூறப்படுகிறது. (இ-4)

## பயிலுநர் ஆசிரியர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு ஒக். 26

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த புதன்கிழமை தொடக்கம் கொழும்பு பத்தரமுல்லவிலுள்ள கல்வி உயர் கல்வி அமைச்சின் 'இசுருபாய' கட்டடத்துக்குள் உண்ணாவிரதம் இருந்து வரும் பயிலுநர் ஆசிரியர்களில் நால்வர் தற்போது சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் அகில இலங்கை ஐக்கிய ஆசிரிய சங்கத் தலைவரான பஞ்ஞசேகர தேரரும் கலந்து கொண்டுள்ளார்.

சுமார் 500 பயிலுநர் ஆசிரியர் இந்தப் போராட்டத்தில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

நாடெங்கும் உள்ள சுமார் 12 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர், (இ-10)

## வியாழன் நண்பகல் வரை 7,200 பேர் வவுனியா வருகை

கொழும்பு, ஒக். 26

வடபகுதியிலிருந்து வவுனியாவுக்கு மக்கள் வருவதற்குத் தாண்டிக்குளத்தில் விதிக்கப்பட்டிருந்த தடை அகற்றப்பட்டதை அடுத்து, தடை அகற்றப்பட்ட தினத்தில் இருந்து இரண்டரை நாள்களுக்குள் 7 ஆயிரத்து 200 பேர் வவுனியா வந்துள்ளனர்.

இவர்கள் அடுத்து எங்கு செல்ல விரும்புகிறார்கள் என்ற விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் திஸ்ஸ ஜயசிங்க கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தின் குழு அறையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தாண்டிக்குளம் சோதனை முகாம் திறந்துவிடப்பட்டமுதலாவது நாளான கடந்த 22 ஆம் திகதி 3 ஆயிரத்து 800 பேரும் —

23 ஆம் திகதி 2 ஆயிரத்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை - 1995/96

## பொறிக் கைப்பணியாளர் தேசிய தராதரப் பத்திரம்

(ஏ. 14 — 29 வரை பயிற்சிகள்)

பின்வரும் கைப்பணியாளர் பயிற்சி நெறிகளுக்குரிய இறுதிப் பரீட்சை 29 - 10 - 1996 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 5 - 11 - 1996 வரை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அ. மோட்டார் பொறிவலர் (முழு நேரம்)
ஆ. குழாய் பொருத்துதல் (ஒரு வருடம்)
இ. மின் கைவினைப் பொறிவலர் (ஒரு வருடம்)
ஈ. மரவேலைப் பொறியிடல் (ஒரு வருடம்)

பரீட்சார்த்திகள் தமது மாணவர் அனுமதி அட்டையுடன் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/3350)

# 45-ம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு: 22 — 04 — 1972

உதிர்வு: 12 — 09 — 1996

செல்வன்

## சரவணமுத்து சரவணபவானந்தன்

[சாவகச்சேரி ப. நோ கூ. சங்க பொதுச்சபை பிரதிநிதியும், 13ஆம் கிளைக்குழுந் தலைவரும்)

சரசாலைக் கிளையின் தலைவராகி
கூட்டுறவின் வளர்ச்சிக்கு வித்திட்ட
சரவணபவானந்தனே உன் அயராத சேவையை
பாட்டினுள் அடக்கலாமா? இளவயதில்
உரமான உன் ஊக்கத் திறமையை
நாட்டு மக்கள் வியந்த வேளை
வரம் பெறச் சென்றாயே, உன் பிரிவின் துயரை
ஏட்டினுள்ளே அடக்கலாமா?

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.
ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி.

(சி-3338)

# தங்கள் மோட்ச வாழ்வின் 45 ஆம் நாள் இன்று

உங்கள் நினைவுடன் நாங்கள்



## அமரர் செல்லப்பா தேவதாசன்

அவர்கள்

இகத்தில் அங்கத்துவம்: 31–03–1931

பரத்தில் அமரத்துவம்: 12–09–1996

அன்று - அந்த இரவு - நேரம் எட்டு
ஒரேயொரு கணம் — ஒரேயொரு கணந்தான்
துடித்தீர்கள் அதன்பின் உங்கள் ஆவி?
ஐயோ!...... ஐயோ!! .. ஈரல் கருக
நெஞ்சு வெடிக்க, உங்கள் பிரிவால் நாமழுதோம்.
இன்றும் அழுகிறோம் ஊற்றெடுக்கும்
எங்கள் அழுகை என்றைக்குமே வற்றாது!

அன்பு மனைவி, செல்வ மகள்,
ஆசைப் பேரப்பிள்ளைகள்.

நவாலி தெற்கு,
நவாலி.

(43292)

# கொழும்புக்கு கப்பலில் பொருள்கள்

உள்ளூர் உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெங்காயம், பனம்பொருள்கள் என்பன எதிர்வரும் நவம்பர் பத்தாம் திகதி 'மாகோ' கப்பலில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பொருள்களைக் கொழும்புக்கு அனுப்புவதற்காக ஏற்கனவே விண்ணப்பித்தவர்களையும் விண்ணப்பிக்காதவர்களையும் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(அ)

# கொழும்புக்கு தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். தபாலகத்திலிருந்து நேற்று 13 தபால் பொதிகள் கொழும்புக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்டன. யாழ். தபாலதிபர் க. கோடிஸ்வரனே மேற்படி தபால் பொதிகளை தபாலக வான் மூலம் எடுத்துச் சென்றார்.

(இ-ரி)

# தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். பிரதேச செயலக தையல் பயிற்சி நிலையத்துக்கு புதிதாக 20 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள்.

இப்பயிற்சி அடுத்த மாதம் இரண்டாம் வாரமளவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இதில் பயிற்சி பெற விரும்புபவர்கள் யாழ். பிரதேச செயலக பிரிவில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

# மோட்டார் சைக்கிள் விபத்து: இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணம் பாஷையூரில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் இராசசிங்கம் வீதியைச் சேர்ந்த இராசு அன்ரனி (வயது39) (மோட்டார் சைக்கிளை ஓட்டியவர்) டேவிட்நொபட் (வயது 45) (பின்னால் இருந்தவர்) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

பின்னால் இருந்தவர் சரிந்து விழப்போனதாகவும்— அப்போது மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் அவரைப் பிடிக்க முயன்ற வேளை மோட்டார் சைக்கிள் முன்னால் இருந்த கட்டடத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

# கப்பலில் இறந்த பயணி

யாழ்ப்பாணம் ஒக். 26

திருகோணமலையில் இருந்து புறப்பட்டு நேற்றுக் காலை காங்கேசன்துறைக்கு வந்துசேர்ந்த 'நரோமா' கப்பல் பயணி ஒருவர் கப்பலில் இறந்து போனார்.

இறந்தவர் குறித்த விவரங்களும், அவரின் இறப்புக்கான காரணமும் தெரிய வரவில்லை.

(இ-4)

# தொழில்நுட்ப கல்லூரி விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் பயிற்சி நெறிகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கலாசாலை வீதி, திருநெல்வேலியிலுள்ள சைவவித்தியா விருத்திச் சங்கக் கட்டடத்தில் ஆரம்பமாகி நடைபெறும் என யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

(இ-4)

# கட்டைபறிச்சான் ஆஸ்பத்திரி மருந்து வகைகள் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

திருகோணமலை மாவட்டத்தில் கட்டை பறிச்சான் அரசாங்க ஆஸ்பத்திரிக்குள் பலவந்தமாக நுழைந்த இனம் தெரியாதோர் அங்கிருந்து மருந்துகளை எடுத்துச் சென்றனர்.

விடுதலைப் புலிகளே இதனைச் செய்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தெரிவித்தது. (இ-4)

# சேவை நலன் பாராட்டுவிழா

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (29-10-96 அன்று)

ஆசிரியை **செல்வி பொ. செல்லையா,**

ஆசிரியர் **திரு. ஆ. சௌந்தரலிங்கம்**

ஆகியோரின் சேவையைப் பாராட்டி வர்த்தக மாணவர்களினால் சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்பட இருப்பதால் திங்கட்கிழமை (28-10-96 அன்று) மாணவர்களை பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்,
யாழ். மத்திய கல்லூரி.

(43356)

# சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வ. உ)

புதிய அல்லது பாவித்த நல்ல நிலையில் உள்ள பின்வரும் உதிரிப்பாகம் தேவைப்படுகின்றது. இதை விற்பனைக்கு வைத்திருப்போர் பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

''பொது முகாமையாளர், சங்கானை,
ப. நோ. கூ. சங்கம், சங்கானை.''

தேவைப்படும் உதிரிப்பாகம்

1) ஸ்ரேறிங் பொக்ஸ் — ஒன்று
பென்ஸ் 911 அல்லது இசுசு லொறிக்குரியது.

பொது முகாமையாளர்
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

(சி/3353)

# 21-ம் நாள் நினைவலைகள்



## செல்வி சிவாஜினி சிவகுமாரன்

(நாவலர் வித்தியாசாலை, கோப்பாய்)

மலர்வு: 1987 – 7 – 8

உதிர்வு: 1996 – 10 – 6

21 நாள்களாகியும் அம்மா! அப்பா!! எனஅழைத்த மழலை மொழி இன்னும் எம் காதுகளில் ஒலிக்கின்றது. மலர்ந்த உன்வதனம் இன்னும் நிற்கிறது. மலர வேண்டிய மொட்டே, மலராமல் போனாயோ? புன்னகை ஓயாத உன் முகம் எம் நெஞ்சை விட்டு நீங்காது.

உம் நினைவாகவே வாழும்,
அம்மா, அப்பா, அண்ணாமார்,
தங்கை, பேர்த்திமார்.

கருகம்பனை,
காங்கேசன்துறை.

VC லேன்.
கோப்பாய் தெற்கு.

(சி/3352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசைத் தட்டிக் கொண்ட தீர்வுத் திட்டங்களே தோல்வியில்!

## இந்த நிலையில் அரசின் நிபந்தனைகள் தெளிவற்ற அணுகு முறையே

கொழும்பிலிருந்து வெளியாகும் 'தினமுரசு' வார இதழில் ''இராஜதந்திரி'' என்ற விமர்சகரால் 'நீண்டு செல்லும் இரத்தப் பிரவாகம்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை இங்கு மறு பிரசுரம் செய்யப்படுகிறது

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த வாரம் நாட்டு மக்களிடம் உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்திருந்தார்.

சத்ஜய-3 (உண்மைவெற்றி) இராணுவ நடவடிக்கையையடுத்துப் படுகாயமுற்ற படைவீரர்களுக்கு வழங்குவதற்கு பெருமளவு இரத்தம் தேவைப்படுகின்றது. எனவே நாட்டு மக்கள் இரத்ததானம் செய்து ஜீவமரணப் போராட்டம் நடத்தும் படைவீரர்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும் என்று ஜனாதிபதி தமது வேண்டுகோளில் குறிப்பிட்டிருந்தார்.

இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படும் போது முதலுதவிச் சிகிச்சைக்கான அனைத்தையும் தயார்படுத்துவதோடு, உயிரற்ற சடலங்களை மூடிக் கட்டுவதற்கான பைகளைக் கூட ஆயத்தப்படுத்தி வைப்பதுண்டு.

வடக்கே இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் சமயங்களில் கொழும்பிலிருந்து விசேட வைத்திய நிபுணர்கள் காயமடைந்தவர்களைக் கையாளச் செல்வதுண்டு.

கூடவே உயிரிழப்புக்களை எதிர்பாாத்த நிலையில் சடலங்களைப் பதப்படுத்துவதற்காக அந்திமகாலச்சேவை நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இராணுவ நடவடிக்கை இடம் பெறும் பிரதேசத்துக்குச் செல்வதுண்டு.

இலங்கையின் வடக்கு — கிழக்கு யுத்தம் ஏராளமான உயிரிழப்புக்கும், பணவிரயத்துக்கும் காரணமாக இருக்கின்றது.

மறுபுறத்தே இறந்த படைவீரர்களுக்காகப் பிரேதப் பெட்டிகளை விற்று கோடி கோடியாகப் பணம் குவிக்கும் அந்திம காலச்சேவை நிறுவனங்களும் கொழுப்பில் இருக்கவே செய்கின்றன.

*கலிங்கத்துப் பரணி*

கலிங்கத்துப பரணியில் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் கழுகுகளும், பருந்துகளும் உயிரற்ற சடலங்களைத் தின்னுவதற்காகப் போர்க்களம் மீது வட்டமிட்டுப் பறக்கும் காட்சி அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பேய்கள் கூட இறந்த உடல்களைக் கொண்டு கூழ் காய்ச்சி உண்ணத் தயாராகின்றன என்றும் எழுதப்பட்டு உள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு யுத்தமும் நாளுக்கு நாள் மூர்க்கமடைந்து கலிங்கத்துப்பரணிக் காட்சிகளையே மனக்கண்முன் நிறுத்துவதாகவும் இருக்கின்றது.

'இரத்தம் தேவை' என்று தேசத்தலைவியான ஜனாதிபதி சந்திரிகாவே நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுக்குமளவுக்கு பெருந்தொகையான படைவீரர்களின் உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருப்பதையே ஊகிக்க முடிகின்றது.

அர்த்தமற்ற. அநாவசியமான யுத்தமொன்றுக்காக இலங்கையில் இரத்தப்பிரவாகம் ஏற்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது,

நாட்டின் ஈடேற்றத்துக்காக உழைக்க வேண்டிய திடகாத்திரமான உடல்கள் வெறுமனே வெட்டி வீழ்த்தப்படும் அவல நிலை காணப்படுகின்றது.

இரத்ததானம் செய்யும்படி வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ள அதே சமயம், படைகளில் சேருமாறு இளைஞர்களை ஊக்குவிக்கும் கண்கவர் விளம்பரங்களும் பத்திரிகை, தொலைக்காட்சி மூலமாக இடையறாது வெளிவந்தவண்ணமாயுள்ளன.

யுத்த களத்தில் தினமும் மரிக்கும் ஏராளமான இளைஞர்கள் மிகவும் வறிய பின்னணியைக் கொண்டவர்கள். எனவே அவர்களின் வறுமை, பின்தங்கிய நிலை என்பனவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியாளர்கள் பெரும் அரசியல் சதுரங்கத்தை ஆடி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

யுத்தத்தினால் காயமடைந்த படையினருக்காக இரத்ததானம் செய்யும்படி ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மறுபுறத்தே எல். ரி. ரி. ஈ. தரப்பிலும் பலர் காயமடைந்து இரத்தத்துக்காகவும், சிகிச்சைக்காகவும் ஏங்குவார்கள் என்பதை அனுமானிக்க முடியும்

யாழ்ப்பாணத்தை எல். ரி. ரி. ஈ. யினர் தம்வசப்படுத்தி வைத்திருந்த காலப் பகுதியில் ஆனையிறவுத் தாக்குதல், பூநகரித் தாக்குதல் மற்றும் அவற்றையொத்த வேறு தாக்குதல்களின் போதெல்லாம் எல். ரி. ரி. ஈ. தரப்பிலும் பலத்த இழப்புகள் ஏற்பட்டிருந்தன.

அப்போது எல்லாம் காயமடைந்தவர்களுக்கு இரத்தம் வழங்குமாறு எல். ரி. ரி. ஈ வேண்டுகோள் விடுத்து வந்தது அவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து வடபகுதி மக்கள் இரத்ததானம் செய்தும் வந்தனர்.

ஆனால் தற்போது எல். ரி. ரி. ஈ. யினர் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலையில் இருந்து வருகின்றனர்.

இரத்தம் சேகரிப்பது, காயமடைந்தவர்களுக்குத் தகுந்த சிகிச்சைகளை வழங்குவது என்பதில் அவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்ளவே செய்வர்.

எனவே இருதரப்பிலும் கொடிய யுத்தம் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தோற்றுவித்து 'உயிர்ப்பிச்சை'க்காக இளைஞர்களை ஏங்கச் செய்யும் நிலையையும் ஏற்படுத்தி விட்டுள்ளது.

*யுத்தம் நீடித்தால் பேரழிவு*

யுத்தம் நிறுத்தப்படாமல் நீடித்துச் செல்லுமானால் தொடர்ந்து உயிர் விரயமும், இரத்த விரயமும் ஏற்படுமென்பதைத் தெளிவாகவே அறிந்து கொள்ள முடியும்.

சமாதானம், அமைதி வேண்டும் என்றுகோரி வந்த ஜனாதிபதி, இரத்தம் வேண்டி நிற்பதை நோக்கும் போது அழிவுதான் நாட்டின் நியதியாகி விட்டதோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

இன்றைய வடக்கு- கிழக்கு யுத்தம் ஏற்படுத்தி வரும் தாக்கத்தை 'சர்வ அதிகாரம்' கொண்டவர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் நன்கறிந்து கொள்ள முடியும்.

முப்படைகளினதும் பிரதம தளபதி (Commander In Chief) என்ற அந்தஸ்தில் இருக்கும் ஜனாதிபதி, தாம் ஒரு ஜனநாயக நாட்டின் தலைவி என்பதையும் மறக்கலாகாது.

ஜனநாயக ஆட்சி என்ற போர்வையில் இராணுவத் தர்பார் இடம்பெறுவதற்கு இடமளிக்கலாகாது. சூதாட்டத்தை யொத்ததே கெடுபிடி யுத்தம். இதில் மனித உயிர்களே விரயமாகிச் செல்லும்.

இந்த உயிர்விரயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது அவசியமானதாகின்றது.

அரசியல் தீர்வுபற்றி அதிகம் பேசினால் இராணுவத்தில் சேருவதற்கு முன்வருவோரின் எண்ணிக்கை குறைந்து விடும் என்று ஆட்சியாளர்கள் நினைக்கலாகாது.

இராணுவத்தில் ஆட்சேர்ப்புக்காக பிரசாரங்களை மேற்கொள்வதில காட்டப்படும ஆர்வம், அரசியல் அணுகுமுறைகளை முன்னெடுப்பதில் காட்டப்படவில்லை.

ஐ. நா ஸ்தாபனத்தில் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதன் மூலமும, பிரபல பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் ஊடாக பேட்டிகளை வழங்குவதன் மூலமாகவும் தம்மை அரசியல் அணுகுமுறைகளில் ஆர்வமுடையோர் என்று ஆட்சியாளர்கள் சித்திரிக்க முனையலாம்.

ஆனால் செயலளவில் ஆட்சியாளர்களால் தகுந்த அரசியல் அணுகுமுறைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதே கண்கூடு.

*அரசின் கருத்துகள் புலிகளுக்கு அனுப்பப்படுகிறதா?*

புலிகளுடன் பேச்சுக்கள், அட்டேச்சுக்களுக்கான நிபந்தனைகள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றெல்லம் ஜனாதிபதியும், அவரது சிரேஷ்ட அமைச்சர்களும் நிறையவே கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஆனால் இக்கருத்துக் கண்ணோட்டங்கள் யாவும் புலிகளைச் சென்றடைந்தனவா? அல்லது பேச்சுவார்த்தைகள் குறித்த அவர்களது நிலைப்பாட்டை ஆட்சியாளர்கள் உரிய தொடர்புகள் மூலமாக அறிய முற்பட்டார்களா? என்பது சந்தேகமே!

கடந்த 13 வருடகாலமாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினை மூர்க்கமடைந்துள்ளது இக்காலகட்டத்தில் இலங்கை- இந்திய ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவின் தலையீட்டுடன் கூடிய அரைவேக்காடான பேச்சுக்கள் மட்டுமே நடத்தப்பட்டனவே தவிர ஆரோக்கியமாக எதுவும் பேசப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா எல். ரி. ரி. ஈ யினருடன் பேசியதையும், இன்றைய ஆட்சியாளர்களது பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் ஓரிரு சுற்றுப்பேச்சுக்கள் நடத்தியதையும் காத்திரமான அரசியல் அணுகுமுறைகள் என்று கொள்ளலாகாது.

மறைந்த இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஷாக் ராபினுக்கும், பலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்துக்குமிடையே ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்துக்காக இருதலைவர்களுக்கும் நோபல் பரிசுகள் கூட வழங்கப்பட்டன.

ஆனால் கடந்த வாரங்களில் இஸ்ரேலிய - பலஸ்தீன ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை தொடர்பாகத் தோன்றிய முரண்பாடுகள் காரணமாக இஸ்ரேலியர்களும். பலஸ்தீனர்களும் மீண்டும் மோதிக் கொண்டனர்.

நோபல் பரிசை வென்ற தீர்வுத் திட்டங்கள்கூடதோல்வியைத் தழுவியுள்ள தறுவாயில், இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றிக் கூறிக்கொண்டும், புலிகள் பேச்சுக்கு வரவில்லை; அவர்கள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும்; தனிநாட்டு கோரிக்கையைக் கைவிடவேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறிவருவதும், அவர்களது அணுகுமுறைகளில் தெளிவின்மையை பிரதிபலிப்பதாக இருக்கின்றது.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இதுவரை காத்திரமான, ஆரோக்கியமான பேச்சுக்கள் இடம்பெறவில்லை என்பதை ஆட்சியாளர்கள் உளப்பூர்வமாக முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும், அதனடிப்படையிலேயே புதிய பேச்சுக்கள், அரசியல் அணுகுமுறைகளை அவர்கள் கட்டி எழுப்ப முன்வரவேண்டும். (இ)

# காபூலுக்கு 25 கிலோ மீற்றரில் மிகக் கடும் சண்டை மூண்டது

காபூல். ஒக். 26

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து சுமார் 25 கிலோ மீற்றர் தொலைவில் முன்னைய அரசாங்கப் படைகளுக்கும், தலிபான் படைகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள தலிபான் நிலைகளை ஜெனரல் மசூட்டின் தலைமையிலான முன்னைய அரசாங்கப் படைகளும் —

வட ஆப்கானிஸ்தானில் உள்ள ரஷ்ய ஆதரவாளரான அப்துல் ரஸீம் டொஸ்ரமின் படைகளும் — இணைந்து தாக்கி வருகின்றன

எனினும் தலிபான் படைகள் [illegible] அதிய [illegible] தாக்குதல் நடத்துவதாகக் கூறப்படுகிறது. (இ-3)

## உலக அரங்கில்

# காஷ்மீரில் வெளிநாட்டு கூலிப்படையை கண்டால் சுட உத்தரவு

ஸ்ரீ நகர், ஒக். 26

காஷ்மீரில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் வெளிநாட்டு கூலிப்படைகளைக் கண்டவுடன் சுடும்படி இந்திய இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தில் உயர் இராணுவ தளபதிகளில் ஒருவரான எஸ் பத்மநாபன் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சவூதி அரேபியா, சூடான், பாகிஸ்தான் உள்ளிட்ட சில இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 300 கூலிப் படையினர் காஷ்மீரில் பிரிவினை கோரிப் போராடும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் என்று நம்பப்படுகிறது. (இ-3)

# ஈராக் போட்டிக்குழுக்கள் சமரசத்துக்கு இணக்கம்

வாஷிங்டன், ஒக். 25

ஈராக்கில் உள்ள குர்டிஷ் போட்டிக்குழுக்கள் சண்டை நிறுத்தத்துக்கும், அமைதிப் பேச்சு நடத்துவதற்கும் இணங்கியிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

குர்டிஷ் ஜனநாயக்கட்சியும், குர்டிஷ் நாட்டுப்பற்று முன்னணியும் வெளியார் தலையீட்டை எதிர்க்கவும்—

பயங்கரவாதத்தைஎதிர்த்து போராடவும்— இணங்கியிருப்பதாக வாஷிங்டனில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

அந்த இரு தரப்புக்களுக்கும் இடையில் அடுத்த வாரம் அங்காராவில் பேச்சுக்கள் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

குர்டிஷ் ஜனநாயகக்கட்சி ஈராக் அரசு சார்புடையது என்பதும்—

குர்டிஷ் நாட்டுப்பற்று முன்னணி ஈரான் அரசு சார்புடையது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இரு போட்டிக் குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதல்களின் போதே ஈராக் தலையிட்டது.

(இ-3)

# பஸ் ஏரிக்குள் விழுந்து 500 பேர் பலி

புதுடில்லி, ஒக். 26

கர்நாடக, மாநில சித்திர துர்க்கா மாவட்டத்தில் ஏரி ஒன்றில் பயணிகள் பேருந்து ஒன்று வீழ்ந்து மூழ்கியதில் 50 க்கும் மேலானவர்கள் இறந்ததாக ரோய்ட்டர் செய்தி ஒன்று கூறுகிறது-

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபா மீதான வழக்குக் குறித்து
# தமிழ்க் கட்சிகள் பலத்த கண்டனம்

கொழும்பு, ஒக். 26

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது அரசாங்கம் வழக்குத் தொடர்ந்திருப்பதனை — தமிழ்க் கட்சிகள் பலவும் கண்டித்துள்ளன.

அரசின் இந்த நடவடிக்கை யதார்த்தம் இல்லாதது; நடைமுறைப்படுத்த முடியாதது; இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த விதத்திலும் பயனற்றது — என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பந்தமாகப் பிரபாகரன் மீது வழக்குத் தொடர்ந்ததால், வேண்டுமானால் அரசுக்கு சர்வதேச பிரசார மதிப்பு உண்டாகி இருக்கலாம் —

பிரபாகரனை எந்த நேரத்திலும் கைது செய்யமுடியவில்லை, இனி அது சாத்தியமாகும் விடயமும் அல்ல —

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுமானால் இந்த வழக்கு பொருத்தமற்றதாகவே முடியும் — என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர் சம்பந்தன் தெரிவித்தார்.

பிரபாகரன் மீது வழக்குத் தொடரப்பட்டமை, அரசாங்கத்துக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தையில் அக்கறை இல்லை என்பதனையே காட்டுகிறது—

விடுதலைப் புலிகள் இல்லாமல் எந்தவித தீர்வையும் காணவும் முடியாது; நடைமுறைப்படுத்தவும் முடியாது. பிரபாகரன் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்றால் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் ஓரங்கட்டப்படுகிறார்கள் என்பதும், அரசியல் தீர்வுக்கான கதவுகள் மூடப்படுகின்றன என்பதுமே அர்த்தம் ஆகும்—

இது, தமிழ் மக்களினதும், எல்லாத் தமிழ்க் கட்சிகளினதும் முகத்தில் அறைந்ததுமாகும் — என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல், எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது:-

பிரபாகரன் மீது வழக்குத் தொடர்ந்தமையால் சிங்கள மக்கள் மகிழ்ந்திருப்பர் என்பது நிச்சயம், ஆனால் அதற்கு நடைமுறைப் பெறுமதி எதுவுமே இல்லை.

இந்தியா பிரபாகரன் மீது வழக்குத் தொடர்ந்திருந்தாலும், விடுதலைப்புலிகள் சக்தியுள்ள இயக்கமாகவே தொடர்ந்து செயற்படுகிறது.

விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதற்கு சகல வித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். தேவைப்பட்டால் மூன்றாந்தரப்பு மதியஸ்தத்தின் மூலமாவது அதனைச் செய்ய வேண்டும். என்றார்—

ஈரோஸ் தலைவர் சங்கர் ராஜி இது குறித்து தெரிவிக்கையில் 'அர்த்தமற்ற அரசியல் பரிசோதனை' என்று வர்ணித்தார்.

ரெலோ கட்சியின் தலைவர் என், ஸ்ரீகாந்தா இது குறித்து தெரிவித்ததாவது:-

எவரும் சட்டத்திற்கு அப்பாற் பட்டவர்களாக இருக்க முடியாது; இருக்கவும் கூடாது.

ஆனால் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகப் பலமுள்ளவர்களாக இருக்கும் வரை அவர்களை அரசியல் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்தால் மட்டுமே எந்தத் தீர்வும் உருப்படியாக அமையும் - என்றார். (அ)

## புதிய கடவுச் சீட்டு இருந்தாலே சவூதிக்கு வீஸா

கொழும்பு, ஒக். 26

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள கணனிமயப்படுத்தப்பட்ட கடவுச் சீட்டு உள்ளவர்களுக்கு மட்டுமே சவூதி அரேபியாவுக்கான வீஸா வழங்கப்படும்.

இந்த நடைமுறை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது.

தற்போது புழக்கத்திலுள்ள கடவுச் சீட்டுக்களில் புகைப் படங்களை மாற்றவும் — மற்றும் பலவிதமான மோசடிகளைச் செய்யவும் — இடமிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பல மோசடிகள் கடந்த காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் புதிய கடவுச் சீட்டுகளுக்கு மட்டும் வீஸா வழங்கப்படும் என்று கொழும்பிலுள்ள சவூதி அரேபியா தூதராலயம் அறிவித்துள்ளது.

சவூதி அரேபியா தூதராலயத்தின் இந்தப் பணிப்புரை நாட்டின் சகல தொழில் முகவர் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கேர்ணல் நிஸங்க விஜயரட்ண தெரிவித்தார்.

(இ 4)

## தாய் - சேய் சிகிச்சை நிலையம் மீண்டும் இயங்கும்

தென்மராட்சி, ஒக். 26

நாவற்குழியில் கடந்த ஆறு மாத காலமாக இடை நிறுத்தப்பட்டிருந்த தாய் — சேய் சிகிச்சை நிலையம் மீண்டும் அடுத்த மாதம் முதல் இயங்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறவன்புலோ, கோவிலாக் கண்டிப் பகுதி மக்கள் நாவற்குழி சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இது இயங்காத படியால் கடந்த ஆறு மாதகாலமாக இப்பகுதி மக்கள் கைதடி தாய் சேய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மீசாலை வடக்கு (புத்தூர் சந்தியில்) நடத்தப்பட்டு வந்த தாய் — சேய் நிலையமும் நவம்பர் முதல் இயங்குமென சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க. தா. சிவபாதம் அறிவித்துள்ளார்.

(இ-117)

## 6-ம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 06 — 1909

மறைவு: 02 — 05 — 1996

### சின்னக்குட்டி நாகமுத்து
(சரசாலை)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
நா. இராசரத்தினம் (மகன்)
சரசாலை.

(சி/3341)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ். கிளைத் தலைமையகத்தில் நடத்தப்படவுள்ள இலவச தையல் பயிற்சி நெறி

தையல் பயிற்சி ஆசிரியை—

தகைமைச் சான்றிதழ்கள் உள்ள பயிற்றப்பட்ட முழு நேர தையல் பயிற்சி ஆசிரியப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தையல் பயிற்சி மாணவர்கள்—

12 மாதங்கள் தொடர்ந்து முழு நேர பயிற்சி பெற விரும்பும் **16 — 25** வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி விண்ணப்பங்கள் 30 - 10 - 96 -க்கு முன்னதாக கிளைத் தலைமையக முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். இவர்களுக்கான நேர் முகப் பரீட்சை 02 - 11 - 96 முற்பகல் 10.00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.


தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டா.

கௌரவ செயலாளர்
இ. செ. ச. யாழ். கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
24 - 10 - 96

(சி/3347)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 31 — 05 — 1953

உதிர்வு: 26 — 09 — 1996

### திருமதி வசந்தி அமிர்தநாதன்

26 - 09 - 1996 அன்று கொழும்பில் இயற்கை எய்திய, எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வழிநடத்திய அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகளும், தம்பியும், மனைவியும், உறவினர்களும்.

40/4, கோவில் வீதி,
சுண்டுக்குளி.

(43206)

## பிறப்பு அத்தாட்சி பத்திரம்

யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்த 1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை மீண்டும் ஏற் [illegible] என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-109)


# JAFFNA COLLEGE
## INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI

### முழுநேரப் பயிற்சி நெறிகள்
வட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கவுள்ளன.

1. Computer Programming and Data Processing - 1 Year
(Basic, Cobal, d-Base III + Pascal) - Practicals on I B M - PACT & MAT 385 Industrial Controller.

2. Civil Draughtmanship - 1 Year
Educational Qnalifications:
Five Passses in G. C. E. O/L with Maths and English — S
Applications close on Thursday the **31** st of October, **1996**.
Interview and classes start on Monday November **4** th.

3. பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சேர விரும்புவோர் ஒக்டோபர் **28** ஆந் திகதி காலை 10.00 மணிக்கு சமுகமளிக்கவும்.
(a) TECHNICIAN CERTIFICATE COURSE: (ENGLISH MEDIUM)
Automobile Technology 1 -Year
(Educational Qualification) G. C. E (O/L) with Maths and Science - 'S
(b) CRAFT COURSES (TAMIL MEDIUM)
1 Electrical Wiring & Installation Practice (மின்னிணைப்பும் நிர்மாணமும்) 1 - Year
2. Welding Practice (உலோக ஒட்டுவேலைப் பயிற்சி) 1 - Year
கல்வித்தகைமை - க. பொ. த. (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்.

4. (a) Students who have not completed their Courses can now follow them at the Institute.
(b) Students who were referred in their examination can sit for those subjects at the Institute.
Our Courses lead you to the Open University of Sri Lanka with exemptions.

DIRECTOR

1996/10/24

(சி-3343)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைச் சமரில் 'ரணவிரு' கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது எப்படி?

## ஓயாத அலைகள் தாக்குதலில் கடற்புலிகள் முக்கிய பங்கு

முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி குறித்து உதயன் செய்தியாளர் கவி வழங்கும் தொடர் கட்டுரையின் 7 ஆவது அத்தியாயம் இன்று பிரசுரமாகவில்லை. அதற்குப் பதிலாக இந்த முகாம் வீழ்ச்சியின் போது ''ரணவிரு''என்ற கப்பல் தகர்க்கப்பட்டது குறித்து ''தின முரசு'' வார இதழ் வெளியிட்ட தகவல் அப்படியே இங்கு தரப்படுகிறது. வழமையான தொடர் கட்டுரை நாளை வெளியாகும். (ஆ-ர்)

முல்லைத்தீவு இராணுவத் தளம் மீதான தாக்குதல் 18-07-96 அன்று அதிகாலையில். புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

'ஓயாத அலைகள்' என பிரபாகரனால் பெயர் சூட்டப்பட்ட தாக்குதல் நடவடிக்கை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரலாற்றில் மிகப்பாரிய வெற்றியாக அமைந்தது.

1991 இல் ஆனையிறவு இராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். 'ஆகாய கடல் வெளிச் சமர்' என்று அழைக்கப்பட்டது.

கடல் வழியாக தரையிறங்கிய அரச படைகள் புலிகளின் முகாம் முற்றுகையை முறியடித்தன.

கடற்புலிகள் அமைப்பு பலமாக இன்மையால் கடல்வழியாக படையினர் தரையிறங்கியதை புலிகளால் தடை செய்ய முடியவில்லை.

முல்லைதீவு 'ஓயாத அலைகள்' தாக்குதலில் புலிகளின் 'கடற்புலிகள்' முக்கிய பங்கை வகித்துள்ளனர்.

கடற்பரப்பில் கடற்புலிகளின் வெடிகுண்டுப் படகுகள் அலைந்துதிரிந்தன. கடற்பரப்பில் புலிகள் ஏற்படுத்திய தடைகள் காரணமாக வான்வழியாக படைகள் தரையிறக்கப்பட்டன.

கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே கடும் சமர் இடம்பெற்றது.

தரைச்சமரைவிட ஆபத்தானது கடற்சமர். பரந்த கடலில் பதுங்கிக் கொள்ளவோ, போரை ஆரம்பித்து விட்ட பின்னர் சுலபமாக பின்வாங்கிச் செல்லவோ வாய்ப்பிருக்காது.

முல்லைத் தாக்குதலில் 19 ஆம் திகதி மாலை 4-30 மணியளவில் நடைபெற்ற கடற்சமரின் சில காட்சிகள் இங்கே விரிகின்றன.

முல்லைத்தீவு முகாமில், புலிகளின் முற்றுகைக்கு உள்ளான படையினருக்கு உதவ விரைந்து செல்கிறது 'ரணவிரு' பீரங்கிக்கடலூர்தி.

கடற்புலிகள் தாக்கலாம்.

கடற்கரும்புலிகள் மோத வரலாம்.

அதனை எதிர்பார்த்து பீரங்கிகள் வாய்திறந்து காத்திருக்கின்றன.

'ரணவிரு' கடலில் செல்ல, அதற்கு மேலாகப் பறந்து ஹெலிக்கொப்டர் வான்வழிப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தது. 'ரணவிரு' கடற்கரையை நெருங்கத் தொடங்கியது இன்னமும் கடற்கரையிலிருந்து இரண்டு கடல் மைல் தூரம் தான்.

ஆனால் கடற்படையினர் எதிர்பார்த்தது போலவே கடற்புலிகளது படகுகள் ரணவிருவை குறிவைத்து விரைந்து வருகின்றன.

'ரணவிரு' வின் பீரங்கி முழங்கத் தொடங்குகிறது. ரணவிருவை கடற்புலிகள் நெருங்க முடியாதவாறு வேட்டுக்களால் கப்பலைச் சுற்றி தடுப்புச் சுவர் எழுப்பப் படுகிறது.

கடற்புலிகளின் படகுகளில் இருந்து ரணவிருவை நோக்கி தாக்குதல் நடத்தப்படுகிறது.

ஹெலிக்கொப்டரை நோக்கியும் கடற்புலிகளின் படகில் இருந்து சுடப்படுகிறது.

ஹெலிக்கொப்டர் மேலே உயர்ந்து பறக்கத் தொடங்குகிறது. கடற்புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருக்கலாம் இருந்தால் ஹெலிசுடப்படலாம். ஹெலிக்கொப்டரை காப்பாற்றுவதற்காக அதனை உயர்த்தி கடல்புலிகளின் இலக்கில் இருந்து விலக்கிக் கொள்கிறார்கள்.

கடற்புலிகளின் படகுகள் ரணவிருவை நான்கு பக்கங்களிலும் சுற்றி வளைக்கின்றன. கடும் சமர் நடந்து கொண்டிருக்கிறது.

கடற்புலிகளின் மத்தியில் இருந்து ஒரு படகு உச்ச வேகத்தில் புறப்பட்டு ரணவிருவை நோக்கிப் பாய்கிறது.

அது கடற் கரும்புலிப்படகு.

கண்ணபிரான், பாத்ர்திபன் என்னும் இரண்டு கடற்கரும்புலிகள் படகில் இருக்கின்றனர்.

கடற் கரும்புலிப் படகு தம்மை நோக்கி வருவதைக் கண்டுவிட்டனர் கடற்படையினர்.

படகைக் குறிவைத்து சரமாரியாகச் சுடுகின்றனர். ரணவிருவை நெருங்க இன்னமும் ஐந்து மீற்றர்கள்தான்; தாண்டிவிட்டால் மோதிவிடும்

கடற்படைத் தாக்குதலில் சிக்கிக்கொண்ட கடற்கரும் புலிப்படகு கடலில் வெடித்துச் சிதறுகிறது

அதே நேரம் மற்றொரு திசையில் இருந்து ரணவிருவை நோக்கிப் பாய்ந்து சென்றது மற்றொரு கடற் கரும்புலிப் படகு.

மிதுபாலன், இன்னிசை (பெண் கடற்கரும்புலி) என்னும் இரண்டு கடற் கரும்புலிகள் அப்படகில் இருக்கின்றனர்.

குறி தப்பவில்லை

ரணவிருவில் மோதுகிறது கரும்புலிப் படகு ஆனால், குண்டு வெடிக்கவில்லை!

மோதிய படகு. முன்பக்கத்தால் உடைந்து போனது. நீர் படகுக்குள் புகுந்தது.

படகை ஓட்டிச் சென்ற மிதுபாலன் படகை மீண்டும் பின்னே இழுத்து பின்வாங்குவது போல பாவனை காட்டிவிட்டு மீண்டும் முன்னோக்கி உச்சவேகத்தில் ரணவிருவை நோக்கி படகைச் செலுத்தி மோதுகிறார்.

பலமாக மோதியது.

ஆனால் இம் முறையும் வெடிக்கவில்லை.

குண்டுத் தயாரிப்பில் ஏற்பட்ட கோளாறு ஏமாற்றிவிட்டது.

கடற்படைத் தாக்குதலில் படகில் இருந்த இன்னிசையும் காயமடைந்தார்.

படகை மீண்டும் பின் நோக்கி இழுக்கிறார் மிதுபாலன், பாதுகாப்பாக பின்வாங்க ஆரம்பிக்கிறது கடற் கரும்புலிப் படகு

அப்படகை தாக்கி அழித்துவிட கடற்படையினர் கவனம் செலுத்திக் கொண்டிருக்க,

இன்னொரு புறமிருந்து வந்து மோதியது மற்றொரு கடற்கரும்புலிப் படகு

இம்முறை குறி தவறவில்லை.

ரணவிருவின் இயந்திரப் பகுதி நொருங்கியதால், கடலில் தடுமாறத் தொடங்கியது ரணவிரு.

அதேநேரம் ரணவிருவின் நேர் எதிர்ப்பக்கமாக மற்றுமொரு கடற்கரும்புலிப் படகு உச்சவேகத்தில் வந்து இடித்து வெடித்தது.

செல்லப்பிள்ளை, சுடரொளி (பெண்) பதுமன் ஆகிய மூன்று கடற்கரும் புலிகள் பலியானர் ள்.

'ரணவிரு' மூழ்கத் தொடங்க கடற்புலிகளின் படகுகள் வந்து சூழ்ந்து கொள்கின்றன. கப்பலில் இருந்த படையினரை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

ரணவிருவை மோதி வெடிக்காத படகுடன் மிதுபாலன், இன்னிசை இருவரும் தப்பிக் கொண்டனர்.

ஐந்து கடற்கரும் புலிகள் பலியானார்கள். கப்பலில் 40 க்கு மேற்பட்ட படையினர் பலியானார்கள். மூழ்கிய கப்பலின் பெறுமதி 10 கோடி ரூபா

### மற்றொரு சம்பவம்

24 - 07 - 96 அன்று மற்றொரு கடற்சமர்! தரையிறக்கும் கப்பல் ஒன்றை குறிவைத்து விரைந்தது கடற்கரும்புலிப் படகு.

'ரணவிரு' தாக்குதலில் பங்கு கொண்ட கடற் கரும்புலி மிதுபாலன் படகை ஓட்டிச் செல்ல சயந்தன் என்னும் மற்றொரு கடற் கரும்புலியும் படகில் இருந்தார்.

கடற் கரும்புலியை தூரத்தில் இருந்தே கவனித்து தாக்கத் தொடங்கினார்கள் கடற்படையினர்.

தரையிறக்கக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட குண்டு பட்டு வெடித்துச் சிதறியது படகு.

கப்பலில் இருந்து 40 மீட்டர் தூரத்தில் வெடித்துச் சிதறிய படகில் இருந்த மிதுபாலன், சயந்தன் ஆகிய கடற்கரும்புலிகள் பலியானார்கள்.

# இலங்கைக்குத் தொடர்ந்து உதவ யு. எஸ். எயிட்ஸ் அமைப்பு தயக்கம்

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கும் உதவிகள் பற்றி ஆலோசிப்பதற்கான கூட்டம் அண்மையில் வாஷிங்டன் நகரில் இடம்பெற்றபோது! — இலங்கையில் நிலவும் சூழ்நிலை அமெரிக்காவின் நீண்டகால உதவிகளுக்கு ஏற்புடையதாகவில்லை என்ற கருத்து அமெரிக்க உதவி அமைப்பின் (யு. எஸ். எயிட்ஸ்) தரப்பில் நிலவியதாக தெரியவருகிறது.

அமெரிக்க உதவிகள் வழமையாக யு. எஸ். எயிட்ஸ் மூலமாகவே இலங்கை அரசுக்கு கிடைப்பதுண்டு.

அரசாங்கத்தின் மூன்றாவது வரவு - செலவுத்திட்டம் அடுத்தமாதம் சமர்ப்பிக்கப்படவிருப்பதற்கு முன்னோடியாக, அமெரிக்கா இலங்கைக்கு வழங்கும் உதவிகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று வாஷிங்டன் நகரில் நடந்தது

இலங்கை வெளியுறவுச்செயலர் ரொட்ணி வண்டர்காட், மேலதிக செயலாளர் நிஹால் ரொட்றிகோ, மற்றும் இயக்குநர் என். சிக்கந்தர் ஆகியோர் இலங்கைப் பிரதிநிதிகளாக இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய யு. எஸ். எயிட்ஸ் நிறுவனத்தின் உதவி நிர்வாகி திருமதி காப்பெண்டர் கருத்துத் தெரிவிக்கையில்,

''இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படாமையினால் மேற்கொண்டு உதவி வழங்குமாறு தமது அமைப்பு நிர்வாகத்துக்கு நம்பிக்கையை ஊட்டுவது கடினமாக இருக்கும்'' என்று தெரிவித்தார்.

கடந்த ஜூலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக்காக விடுத்த வேண்டுகோளை யு எஸ். எயிட்ஸ் அமைப்பு உன்னிப்பாக கவனத்தில் எடுத்துக் கொண்டபோதிலும் —

இப்பகுதியில் சேவைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் அரசியல் மற்றும் பாதுகாப்பு சூழ்நிலைகள் சாதகமாக இல்லை என்றும் —

வடக்கு - கிழக்குக்குச் சென்று உதவி தேவைப்படும் துறைகளைக் கண்டறிய முடியாத நிலை நிலவுவதாகவும் —

அவ்வாறிருக்கும்போது வழங்கப்படும் உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன [illegible] முடியாதிருக்கும் என்றும் அந்நிறுவனத்தினர் சுட்டிக்காட்டியதாகத்தெரிகிறது.

# அரசுடன் இணைந்து போக முஸ்லிம் காங். விருப்பம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது தமக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தும் நடவடிக்கையாக நேற்று தொடக்கம் அரசநாடாளுமன்ற குழுக்கூட்டங்களில் கலந்து கொள்ளப்போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடம் தீர்மானித்து உள்ளது.

ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான துறைமுகங்கள். கப்பற்றுறை அமைச்சர் எம்.எச். எம். அஷ்ரப்புக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலருமான ஹக்கீம் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் தொடக்கம் நள்ளிரவு வரை நீடித்த சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் கட்சியின் அரசியல் உயர்பீடம் இந்தத் தீர்மானத்தை [illegible]துள்ளதென தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

இந்தியாவில்

# தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவரை விடுவிக்க முயற்சி

கொழும்பு. ஒக், 26

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விரைவில் விடுவித்து இலங்கைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் நீரியல்வள அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கடந்த சில மாதங்களில் இந்திய கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற இலங்கை மீனவர்கள் அவர்களின் படகுகளுடன் இந்திய கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்குமாறு, அவர்களது உறவினர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளின் உரிமையாளர்களும் நீரியல்வள அமைச்சர் இந்திக்க குணவர்த்தனவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 126 மீனவர்கள் 23 மீன்பிடிப் படகுகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் நாடு அதிகாரிகள் தடுத்து வைத்திருந்த 26 மீனவர்கள் 5 படகுகளுடன் விடுவிக்கப்பட்டு இலங்கை வந்துள்ளனர். மிகுதி மீனவர்களை விடுவிப்பதற்காக கடற்றொழில் அமைச்சின் அதிகாரி ஒருவர் அடுத்த வாரம் இந்தியாவுக்கு செல்ல இருக்கிறார். (இ-ரி)

# கல்விக்கல்லூரி அனுமதி நேர்முகபரீட்சைதிங்களன்று

யாழ்ப்பாணம், ஒக். 26

கல்விக்கல்லூரிகளுக்கு ஆசிரியர் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை வலயம் I கல்வித் திணைக்களத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறவுள்ளது.

வவுனியா கல்விக் கல்லூரிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை அழைப்புக் கடிதத்தில் கோரப்பட்ட சகல ஆவணங்களுடனும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும் வண்ணம்கேட்கப்பட்டுள்ளது. (-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

காட்டுக்கப்புகள், முதுரை, பாலை 5/6, 4/6, 20 அடி நீளம், 3 அறைக்குரிய திராந்தி, கோப்பிசம், பனை மரம், சிலாகைகள் விற்பனைக்குண்டு. 50 அடி நீளம் 20 அடி அகலத்திலும் நீளமாக அமைத்துக் கொள்ளலாம். 23, சேப்பல் வீதி, யாழ்ப்பாணம். (43333)

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. திருமதி R. இராஜகுலேந்திரன், இல. 9, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (43348)

செவ்வரத்தை, குறோட்டன் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பிளான்ட் பரடைஸ், இல. 152/2, கோவில் வீதி. யாழ்ப்பாணம். (43346)

### ஆண்டு- 4

1997 இல் புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை 27-10-96 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தொடர்பு: புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (43303)

### இசை வகுப்புகள்

ஓர்கன் (Organ), கிற்றார், (Guitar), புல்லாங்குழல் (Flute) வகுப்புகள் நடைபெறுகின்றன. காலம்: சனி ஞாயிறு நாள்களில் காலை 7.00 மணி. முகவரி: புவனகிரி, அரசடி பிள்ளையார் கோவிலடி, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (42943)

### பயிற்சிப் பட்டறை

உடுவில், தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட பாடசாலை ஆரம்பக்கல்வி ஆங்கிலப் பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நிகழ்வு நவம்பர் முதலாம் திகதி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும்—

சங்கானை- சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை நவம்பர் இரண்டாம் திகதி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் நடைபெறும். (இ-152)

### இலவச திருமணசேவை

அரசாங்க உத்தியோக 36, 30 வயது மணமக்களுக்கு படித்த மணமகள் தேவை ஸ்ரீலங்கா, அச்சகத்துக்கு அருகில் யாழ்ப்பாணம். ஞாயிறு மட்டும் மு.ப 9.30 - 12.03 வரை. (43343)

### புலமைப்பரிசில் '97

ஆண்டு 4 படித்துக்கொண்டிருக்கும் புலமைப்பரிசில் 97 பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை 27-10-96 ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் நடைபெறும். Bond கல்வி நிலையம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (43347)

## இலங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

யாழ்ப்பாணம்

## பிரவேசம் - 1997

தகைமைகள் — க பொ. த. உயர்தரம்

(வைத்திய பரம்பரைக்கு முன்னுரிமை வழங்கப்படும்) விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- **30-11-96**

அதிபர்.

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (43320)

## சுகாதாரத் தொழிலாளர்களை (Sanitary Labourers) தொழில் வங்கியில் பதிவு செய்தல்

யாழ். மாவட்டத்தில் தொழில் வங்கி மூலம் சுகாதாரத் தொழிலாளர்களை (Sanitary Labourer) நியமனஞ் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், அதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். செயலக திட்டமிடல் பணிமனையில் பெற்று 10 - 11 - 1996 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

செ. பத்மநாதன்,
அரச அதிபர், யாழ். மாவட்டம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
23-10-1996 (சி/3349)

## 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர்

### டாக்டர் இ. சிவஞானசுந்தரம்

(மட்டுவில்)

மண்ணில்: **4-08-1935** விண்ணில்: **26-09-1996**

காடுகளில் இனம்பிரிந்த கலைகளானோம்

இனியதுன் பேச்சு, இனியதுன் செய்கை,
இனியதுன் மருந்து. பல் காலும்
நுணுகி ஆராய்ந்து ''வர்மம்'' என்கின்ற
துறையினில் நுழைந்து நாம்வியக்க
தனியநீ புரிந்த சாதனை எல்லாம்
சரித்திரம், அடட உன்போல
இனியொரு மனிதன் வருவதெப்போது?
ஏங்கும் எம் உள்ளம் நெக்குருகி!

முறிந்தவை பொருந்தும்; கழன்றமூட் டெலும்பு
முன்புபோல் அமையும்; உன்கையால்
சிறந்த அத். தைலம் செழித்திடப் பூசி
உருவினால் மனிதன் மீண்டொருகால்
பிறந்தது போல புதியதோர் உணர்ச்சி
பரவும் நம் உடலெலலாம்! இன்று
இறந்தனை என்ற சொல் இரு விழி நீர்
இறைக்க எங்கேகினை ஐயா!

நினைவில்:
செவ்வந்தி குடும்பத்தினர்

பெருங்குளம்,
சாவகச்சேரி. (43315)

## 6-ம் மாத நினைவஞ்சலி



### அமரர் பண்டாரி பொன்னையா

தோற்றம் **23 - 05 - 1920** மறைவு **27 - 05 - 1996**

அமரர்

### இராமலிங்கம் இராசரட்ணம்

(பிள்ளையார் ரான்ஸ்போட் - உரிமையாளர்)

தோற்றம்: **20 - 09 - 1946** மறைவு: **19 - 04 - 1996**

### செல்வி சிறில் யூலி

(சரசாலை அ. த. க. பாடசாலை மாணவி)

தோற்றம்: **01 - 04 - 1987** மறைவு: **19 - 04 - 1996**

எம் பாச உள்ளங்களே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மாதங்கள் ஆறு சென்றாலும் எங்கள் நினைவு எங்களை விட்டு மாறாது. எங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள். யாவரையும் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா மனைவி, மக்கள்,
மருமக்கள், பெறாமக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மாமன்மார்,
அத்தைமார், சித்திமார்.

சரசாலை தெற்கு, சரசாலை,
அ. த. க. பா வீதி, சாவகச்சேரி. (43240)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 22 — 04 – 1972

ஆண்டவன் அடியில்: 12 — 09 — 1996

செல்வன்

### சரவணமுத்து சரவணபவானந்தன்

(வெளிவாரி பல்கலைக்கழக மாணவனும், பிரவேச பண்டிதரும்)

சந்ததமும் செந்தமிழில் பாடிப் பேசி
சரசாலை யூருக்குப் பெருமை சேர்த்துச்
சிந்தையிலே நைந்துருக இடமே கொண்ட
சரவணபவானந்தா, வுந்தன் சேதி
வந்துருக்கும், தீயினிலும் வெம்மையாக்க
வரமிருந்து பெற்றவுனை யக்கோலம் ஈண
பைந்தமிழில் பாவெழுமோ? பாட்டிசைக்க
நாவெழுமோ?
பரமனடி பணிந்து நிற்போமெங்கு காண்போம்!

— குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (சி/3339)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 01 — 1938

மறைவு: 08 — 11 — 1995

### ஈஸ்வரி குலசேகரம்பிள்ளை

திதி: **26 - 10 - 1996**

எமது குடும்பத்தில் ஒளிவிளக்காய் விளங்கிய அன்பு அன்னையே! எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு காலமாகிலும் என்றும் என்றும் உமை மறவோம். எமக்கு அன்பெனும் தேனை ஊற்றி, பற்றெனும் பாசத்தை ஊட்டி எமை வளர்த்து ஆளாக்கிய உங்களை என்றும் மறவோம்.

உங்கள் அன்புக்காக நிலை தடுமாறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி. (8935)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### குழாய் முறுக்கவி வழங்கல்

நல்ல நிலையிலுள்ள, பாவனைக்குரிய 36 அங்குலம் அல்லது 24 அங்குலக் குழாய் முறுக்கவி (Pipe Wrench) தேவைப்படுகிறது.

வைத்திருப்பவர்கள், விலை விவரங்களுடன் வேலைகள் எந்திரவியலாளர், பராமரிப்புப் பகுதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுடன் 01-11-1996 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும் அல்லது விண்ணப்பிக்கவும்.

— பதிவாளர்

த.பெ. இல 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி/3348)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# யாழ். பாதுகாப்பு நிலை குறித்து அகதிகளுக்குத் திருப்தி இல்லை

## உபாலி நிறுவன செய்தியாளர் பி.பி.ஸிக்கு பேட்டி

வவுனியா ஒக். 26

வன்னிப் பகுதியில் இருந்து மக்கள்வவுனியா வருவதற்கு படையினரால் போடப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டதை அடுத்து ஆயிரக்கணக்கானோர் வவுனியா வந்துள்ளனர். எனினும் இவர்களில் பலருக்கு யாழ்ப்பாணம் பாதுகாப்பு நிலைமை குறித்துத் திருப்தி இல்லை கொழும்பு செல்லவே விரும்புகிறார்கள்.

வவுனியா வந்தடைந்த அகதிகள் பலரைச் சந்தித்த உபாலி செய்தி நிறுவன செய்தியாளர் ஜினசேனரத்து கமகே பி.பி.சியின் சிங்கள சேவைக்கு மேற்கண்டவாறு பேட்டி அளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

''கடந்த 5 மாதங்களாக அகதிகள் வவுனியா வருவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். படை அதிகாரிகள் விதித்திருந்த வயதெல்லைக் கட்டுப்பாடு மற்றும் விடுதலைப் புலிகள் விதித்திருந்த சில கட்டுப்பாடுகள் காரணமாக அவர்களால் வவுனியா வர முடியாதிருந்தது.

தற்போது வவுனியா வந்துள்ள 28 வயதுடைய ஒருவரைச் சந்தித்து அவருடன் கலந்துரையாடிய போது, தான் இதற்கு முன்னர் வவுனியா வருவதற்கு 16 முறைகள் முயற்சித்தார் எனவும்—

ஒவ்வொரு முறையும் வயதெல்லையைக் குறிப்பிட்டு படையதிகாரிகள் தன்னை வவுனியா வர அனுமதிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட காரணத்தினால் தன்னால் வவுனியா வர முடிந்தது எனவும் அவர் கூறினார்.

தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வரும் மக்களை முதலில் படை அதிகாரிகளே பொறுப்பேற்கின்றனர். அவர்கள் தொடர்பான விவரங்களை பதிவு செய்த பின்னர் வவுனியா அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட குழுவினரிடம் அவர்களை ஒப்படைக்கின்றனர்.

இதன் பின்னரும் போக்குவரத்துப் போன்ற விடயங்களில் படையினர் இந்த அகதிகளுக்கு உதவுகிறார்கள்.

வவுனியா வரும் அகதிகளுக்கு சர்வதேச அமைப்புகளோ தொண்டர் நிறுவனங்களோ உதவி வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

எனவே அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட—அரசாங்க அதிபரைச் சுற்றிநிற்கும் அதிகாரிகள் மாத்திரமே இந்த அகதிகளின் நலன்களைக் கவனிக்க வேண்டியுள்ளது.

வவுனியா வரும் அகதிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என வவுனியா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஒக். 26

அண்மையில் பிரதித் தபால் மா அதிபர் கொழும்பிலிருந்து யாழ் வந்த போது பருத்தித்துறை, சுழிபுரம், சுன்னாகம், கரவெட்டி, யாழ்ப்பாணம், சங்கானை, சாவகச்சேரி, அச்சுவேலி, வண்ணார் பண்ணை அஞ்சல் அலுவலகங்களுக்கான முத்திரைகளையும், யாழ் தபாலகத்துக்கான பெறுமதி கூடிய முத்திரைகளையும் தம்முடன் எடுத்து வந்திருந்தார்.

(இ-ரி)

## சமய சந்திகளில்

பருத்தித்துறை மருதடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

(அ-173)

★ ★ ★

யாழ். பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் பூரணை நாள் ஆராதனை வழமைபோல் நாளை சனிக்கிழமை காலை 8-15 மணி முதல் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'திருமந்திரம்' என்ற பொருளில் திரு. சிவமகாலிங்கம் சொற்பொழிவாற்றுவார். இறுதியில் மகேஸ்வர பூசையும் இடம் பெறும்

(அ-4)

## கணனி நிலையம்

வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் கணணிப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை இப் பயிற்சி நிலையங்களை நிறுவவுள்ளது

கணணி இன்றைய தொழில் உலகில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பத்திரிகைத் தொழில் தொடக்கம் வங்கித் துறை வரை சகல அலுவல்களும் இப்போது கணணி மயமாகி விட்டன. கொழும்பிலும் தெற்கின் ஏனைய பாகங்களிலும் அரசாங்கத் திணைக்களங்கள், தனியார் துறையினர், வர்த்தக ஸ்தாபனங்கள் என்று பல துறைகளையும் கணணி ஆட்கொண்டுள்ளது.

ஆனால் வடக்கு—கிழக்கில் இன்னும் இத்துறை அறிமுகமாகவில்லை. போர்ப் பிரதேசமாக இருந்ததால், ஏற்கனவே இயங்கிய பல துறைகளே ஸ்தம்பித்துப் போனதால் அல்லது அரைகுறை நிலையில் இயங்கியதால் புதிய முயற்சிகள் எதுவும் இப் பகுதிகளில் தொடங்கப்படவில்லை.

அந்த நிலையை மாற்றும் முன்னோடியாக வவுனியாவிலும், திருகோணமலையிலும் கணணிப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட இருப்பது வரவேற்கத்தக்கதே.

ஆயினும் இத்தகைய ஒரு பயிற்சி நிலையத்தை அரசு யாழ்ப்பாணத்திலும் நிறுவ வேண்டும். அதற்கு முன்னுரிமையும் முதலிடமும் கொடுக்க வேண்டும். படித்துவிட்டு வேலையில்லாதிருக்கும் இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை இப்பகுதியில் மிகவும் அதிகம். அவர்களுக்கு கணணித்துறையில் மட்டுமன்றி ஏனைய தொழிற்துறைகளிலும் பயிற்சி அளிக்க வேண்டும்.

தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு யாழ்ப்பாணத்தில் தனக்கென ஒரு பயிற்சி நிலையம் இல்லை. பயிலுநர்களைத் தேர்ந்தெடுத்து தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளில் தொழிற்பயிற்சி அளித்து பரீட்சையை நடத்திச் சான்றிதழ் வழங்குகிறது

அவ்வாறு இல்லாமல் தெற்கில் உள்ளது போன்று பிரதான பயிற்சி நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படுவது அவசியம். இப்பகுதியில் அறிமுகமாகாத கணணி, எலக்ரோணிக், தொலைத்தொடர்பு மற்றும் புதிய தொழில் நுட்பங்களைப் பயிற்றுவிப்பதற்கு பயிலுநர்சபை முன்வர வேண்டும்

தொடக்கத்தில் கணணிப் பயிற்சி நிலையத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தால் அதனைப் படிப்படியாக ஏனைய புதிய தொழில்நுட்பங்களைப் பயிற்றுவிக்கும் நிலையமாக விஸ்தரிக்கலாம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் வவுனியாவுக்கும், திருமலைக்கும் சென்று கணணிப் பயிற்சி பெறவேண்டிய நிலைமை ஆரோக்கியமானதல்ல. அதில் பல விதமான சிரமங்களும் கஷ்டங்களும் உண்டு. வசதி வாய்ப்பு உள்ள இளைஞர்களுக்கு மட்டுமே அது கட்டுப்படியாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து இளைஞர்கள் வவுனியா, திருமலைக்குச் செல்வதால் அங்குள்ள இளைஞர்களுக்கான வாய்ப்பில் பங்கு கேட்பதுமாகும்.

யாழ்ப்பாணத்திலேயே ஒன்றை நிறுவினால் குடாநாட்டு இளைஞர்களுக்கு எல்லா வகைகளாலும் நன்மை பயக்கும்.

இதனைச் செய்வதற்கு உரிய அமைதிநிலை இன்னும் இங்கு உருவாகவில்லை என்று அரசு கருதுகிறதோ? அதற்கான சூழ்நிலையை உண்டாக்குவதும் அரசின் கைகளிலேயே உண்டு.

# தற்காலிக ஆசிரியர்களாக 39 பேர் நியமனமாவர்

## அடுத்த மாதம் 1 ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம் ஒக். 26

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 39 பேர் தற்காலிக (தகுதிகாண்) ஆசிரியர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்மொழி மூல ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவான பின்வருவோர். சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது:-

### வலிகாமம் வடக்கு

கே. சீராளன் — மாவிட்டபுரம், எஸ். அகிலன் — அளவெட்டி வடக்கு, ஏ. தயாநிதி —தெல்லிப்பழை,

### வலிகாமம் கிழக்கு

எம். கவிதா — கைதடி, கே. கோமளா — இடைக்காடு, வி. முகுந்தன் — புத்தூர், எஸ். சிறீசேதுபரன் — பத்தைமேனி, எஸ் மதுமதி — உரும்பிராய் வடக்கு, கே. சுதாஸ்குமார் — கரவெட்டி கிழக்கு,

### வடமராட்சி வடக்கு

எஸ். சிவகுமரன் — தொண்டமானாறு, பி ஜெயகீதா — அல்வாய், ரி. வளர்மதி — வல்வெட்டித்துறை, எம். கதிர்காமலிங்கம் — பொலிகண்டி' வி. முரளி — பருத்தித்துறை.

### வடமராட்சி தெற்கு- மேற்கு

ஜி. செந்தூர் செல்வன் — கரணவாய், ஏ. ஈ தேவேந்திரன் — கரவெட்டி கிழக்கு, வைகுந்த வாசன் — கரவெட்டி கிழக்கு, ஏ. ஜானகி — கரவெட்டி மத்தி.

### வலிகாமம் தெற்கு மேற்கு

ஆர். ராதிகா — மானிப்பாய், ஆர். விக்னமோகன் — மாதகல், , பி. சுகந்தி — சுதுமலை, வடக்கு, பி. நவஜோதி — ஆனைக்கோட்டை,

### வலிகாமம் தெற்கு

கே. உலகேஸ்வரி — சுன்னாகம், ரி. திருமுருகராஜன் — இணுவில் கிழக்கு. கே. என். சந்திரகலா — இணுவில் மேற்கு, கே. கரிகரசக்தி — கந்தரோடை, வை. பாஸ்கரன் —இணுவில், எல். பேரானந்தன் — தாவடி.

### தென்மராட்சி

என். ஜெயரூபன் -கைதடி, வி. வளர்மதி- உஷன், கே. சந்திரசேகரன் - கற்குழிவடக்கு, கே. உதயாஜனி - கைதடி நுணாவில், எஸ். தேயந்தி- கைதடி, ஜி. காஞ்சனா - கைதடி, எஸ். பாலதயாகரன் -கைதடி வடக்கு, என். சுதன் கைதடி, ரி. சுவ்சுபைதா - சாவகச்சேரி,

### வலிகாமம் மேற்கு

ஜி. சுஜாந்தினி - அராலி மத்தி, பி. பேமலதா - சுழிபுரம்.

(இ-4)

# கோழி வளர்ப்புக் குறித்து மூன்று நாள் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள 65 பேருக்குக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகள் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

மானிய அடிப்படையில் ஒவ்வொரு குஞ்சும் 10 ரூபாவுக்கு வழங்கப்பட்டு கிடைக்கும் நிதியில் இருந்து மேலும் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் ஒரு பகுதியினருக்கு வழங்கப்படும்.

கோழிக்குஞ்சு பெற்றவர்கள் நல்ல பயன் பெறுவதற்காக அவர்களுக்கு மூன்று நாள் பயிற்சி யாழ். கால்நடை வைத்தியசாலையில் அளிக்கப்படுகிறது

இரண்டாவது தொகுதியினருக்கும் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை பயிற்சி அளிக்கப்பட இருப்பதாகவும் --

யாழ் பிரதேச செயலகத்தில் கோழிக்குஞ்சு பெற்றவர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பின் 29 ஆம் திகதி தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறும் — கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எம். தங்கராசா கேட்டுள்ளார்.

(இ-3)

## நாளை

ஐப்பசி 11

ஞாயிற்றுக்கிழமை

திதி: பிரதமை

முன் இரவு 7.26 வரை.

நட்சத்திரம்: பரணி

பின் இரவு 3.14 வரை.

ராகுகாலம்: 4.33 -6.03

[illegible] 10.[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# வேலைவாய்ப்பில் பட்டதாரிகளுக்கு நியாயம் கிடைக்குமா?

## வாசகர் திருமுகம்

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது செயலகத்தினரால் வேலை வங்கி ஒன்று உருவாக்கப்பட்டு இருப்பது யாவரும் அறிந்ததே. தற்பொழுது அவ்வங்கியில் இருந்து திறமை, தகுதி அடிப்படைகளில் அரசாங்க, கூட்டுத்தாபன மற்றும் குறிப்பிட்ட சில தனியார் ஸ்தாபனங்களில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால் அப்பட்டியலில் பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் பெயர்கள் சேர்த்துக் கொள்ளப்படாமை வேதனை தரும் விடயம் மட்டுமன்றி நியாயம் அற்றதுமாகும். இன்று எமது நாட்டில் நிலவும் மோசமான வேலை இல்லாப் பிரச்சினைக்கு பட்டதாரிகள் விதிவிலக்கானவர்கள் அல்லர் என்பது வெளிப்படையான உண்மை. அப்படியிருக்க பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டு மற்றவர்களின் பட்டியல்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

1994-ம் ஆண்டு திட்டமிடல் அமைச்சு மூலம் கணிசமான அளவு பட்டதாரிகளில் பட்டதாரிப் பயிலுநர்கள் என்ற வகையில் பலதரப்பட்ட நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்களது நியமனங்கள் நிரந்தரமாக்கப் படும் போது ஏற்படும் வெற்றிடங்களுக்கு, புதிய பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று அடிக்கடி கூறப்பட்டு வருகின்ற போதிலும் இன்றுவரை அது நடைபெறவில்லை. எப்போது நடைபெறும் என்றும் கூற முடியாது.

மேலும் வேலை வங்கிக்கான விளம்பரத்தில் —

''இளைஞர் விவகார அமைச்சில் பதிவு செய்த பல்கலைக் கழக பட்டதாரிகள் ஏற்கனவே வேலை வங்கியில் அங்கத்தவர்களாக இருப்பதால் அவர்கள் புதிதாக வேலை வங்கிக்கு விண்ணப்பிக்க வேண்டியது இல்லை'' என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அதனால் பெரும்பாலான பட்டதாரிகள் மேலதிக விண்ணப்பம் எதனையும் சமர்ப்பிக்கவில்லை.

வேலை வங்கியில் அங்கத்தவர்கள் என்ற ரீதியில் மற்றையவர்களுக்கு வழங்கப்படும் அதே சந்தர்ப்பம் பட்டதாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். என்பதில் இரு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது.

குறிப்பிட்ட வேலை தனக்கு பொருத்தமானதா இல்லையா என்பதை தெரிவு செய்வது ஒவ்வொருவரினதும் சொந்த உரிமையாகும். அதை நிர்ணயிக்கும் உரிமை அதிகாரிகளுக்கு இல்லை வேண்டுமானால் சில நிபந்தனைகளின் அடிப்படையில் நியமனங்கள் அவர்கள் வழங்கலாம்.

ஆனால் தகுதி, திறமை என்னும் அடிப்படை-களில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் போது அதில் இருந்து ஒரு சாராரைப் புறக்கணித்து மிகுதியானோரை பரிசீலிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

கையில் இருக்கும் சந்தர்ப்பத்தை வழங்காது எப்போது நடைபெறும் என்று கூறமுடியாத ஒன்றுக்காக காத்திருங்கள் என்று கூறுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் அல்ல.

இவ்விடயத்தில் சில இடை நிலை அதிகாரிகள் தன்னிச்சையாகவும் சுய விருப்பு வெறுப்புகளின் பேரிலும் செயலாற்றுவது மனவருத்தத்துக்கு உரியதாகும். இது விடயத்தில் அரச அதிபர் நேரடியாகத் தலையிட்டு பட்டதாரிகளுக்கு நியாயம் கிடைக்க உதவ வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

''நீலன்''

செட்டித்தெரு,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவக்கொழுந்து புண்ணியமூர்த்தி

சுதுமலை தெற்கு குண்டடியைப் பிறப்பிட மாக வும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சி. புண்ணியமூர்த்தி 18-09-96 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் சோதியின் (திருநெல்வேலி) அன்புக் கண வரும் இந்திராணி, சிவானந்தன், நித்தியானந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-09-96 இல் மலேசியாவில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. வைத்தீலிங்கமும்
சகோதரர்களும்.

''குண்டடி'',
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (43354)

## திருமதி வீராத்தை பொன்னையா

புலோலி தெற்கு காந்தியூரைச் சேர்ந்த திருமதி வீராத்தை பொன்னையா 24-10-96 இல் கால மானார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும், செல்லம்மா, நாகரத்தினம், மோகன் (கூட்டுறவுப் பரி சோதகர் யாழ்ப்பாணம்), சண்முகநாதன் [சூழல் பாதுகாப்பு அதிகாரசபை கொழும்பு], பிறேமலதா ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மகுலசிங்கம் [ஜேர்மனி], குகன், விமலேஸ்வரி, கீதாஞ்சலி, சிவ மலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற் றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ. மோகன்
[மகன்]

காந்தியூர்,
புலோலி தெற்கு,
புலோலி. [43350]

### திருமதி
## கந்தையாபிள்ளை நல்லபிள்ளை

காரைநகர், கோவளத்தைச் சேர்ந்த திருமதி கந்தையாபிள்ளை நல்லபிள்ளை 23-10-96 இல் நாகமவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாபிள்ளையின் (பிர பல வர்த்தகர், அப்புத்தளை) அன்பு மனைவியும், விசாளாட்சி, தம்பிராசா (Retired Divisional Investigating Inspector), காலஞ்சென்ற பாலசிங்கம், தியாகராசா, பத்மசிங்கம் (வர்த்தகர்கள், அப்புத் தளை), ராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், விசாலாட்சி, ராஜலட் சுமி, சிவயோகம், செல்வராணி, V. தர்மலிங்கம் (Retired Accountant) ஆகியோரின் அன்பு மாமியாரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-10-96 இல் நாகமவில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
க. தம்பிராசா

22, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி. (43345)

### ஊரெழு
## திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை

(ஓய்வு பெற்ற உப அதிபர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை)

திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை (உப-அதிபர்) 24-10196 வியாழன் அச்சுவேலியில் தமது மகன் வீட் டில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் திரு க.இராமுப் பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், திரு இ.சுகுண தீரன் (பிரதம கணக்காளர், கல்வி அமைச்சு மாகாண சபை திருகோணமலை), திரு இ.ஞானதீரன் (R.M.P அச்சுவேலி), திருமதி மு.கமலவேணி, திருமதி ம.ஞானவேணி, திருமதி க.பாலவேணி ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு க.முத்துக்குமாரசுவாமி (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), திரு இ.மகேந்திர நாதன் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத் தர் - கட்டடத் திணைக்களம), திரு க.கணநாதன் (கொழும்பு), திருமதி சு. வசந்தாதேவி, திருமதி ஞா.ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியும், சு.தனஞ்செயன் (கணக்காளர்), சு.சுமங்கலி, திருமதி கமலகுமாரி, குணசிங்கம், காலஞ்சென்ற மு.கேதீஸ் வரன் மற்றும் ம.நக்கீரன், ம.ஈஸ்வரதாஸ், க.துஷ்யந் தன், க.வாசுகி, க.லோகாம்பிகை, ஞா.யாழினி ஞா.ஜகனி (இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக் கிழமை (26-10-96) காலை 10 மணிக்கு மகனது அச்சு வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ ஞானதீரன்
(மகன்)

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (43359)

## மக்கள் வங்கி கடன்

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பஸ், மினி பஸ் வாங்குவதற்கு மக் கள் வங்கி கடன்வழங்க உள் ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெற்று வாகனங்கள் கொள்வனவு செய்ய விரும்பு பவர்கள் உடனடியாக அந்தந் தப் பிரதேச செயலர்கள் மூலம் விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (இ)

## கால்நடை வளர்ப்போர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ் மாவட்டத்திலுள்ள கால் நடை வளர்ப்பாளர்கள் தங்களிடமுள்ள நல்லின பசுக்கள், கன்னிப்பசுக்கள், ஆடுகள் ஆகியவற்றை விற் பனை செய்ய விரும்பினால் தத்தமது பிரிவுகளுக்குரிய கால்நடை வைத்திய அலுவ லகங்களில் விபரங்களைத் தெரிவித்துப் பதிவு செய்து கொள்ளலாமெனக் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களம் தெரிவித்துள்ளது. (இ)

### தமிழர்களை ...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமானவையென்றும்-

இலங்கையில் சமாதா னத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காக நீண்ட காலமாகத் தாம் தெரிவித்து வரும் கருத்துகளுக்கு இது விரோதமானது என்பதை ஜனாதிபதி வலியுறுத்திக் கூறி யுள்ளார் என்றும் -

அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-4)

### அதிகாரப்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இருமுனை முயற்சி களை நாம மேற்கொண்டு வருகின்றோம் — என்றும் அமைச்சர் பீரிஸ் பத்திரிகை யாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார். (அ)

### வியாழன்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

211 பேரும் —

24 ஆம் திகதி நண்பகல் வரை ஆயிரத்து 200 பேரும் வவுனியா வந்தனர் என்று பிரிகேடியர் திஸ்ஸ ஜயசிங்க மேலும் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் வவுனியாவில் 19 சமூக நலன் பிரிவுகளில் தங்க வைக்கப்பட் டுள்ளனர். (இ)

### கத்தோலிக்க..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் ஒன்று இருப்பதாக வும் வந்து ஆசீர்வதிக்குமா றும் கோரினராம்.

சந்தேகமடைந்த குருவா னவர் குருமனையில் மின் விளக்குகள் அனைத்தையும் எரிய விட்டு வெளியே வந்த போது வானில் இருந்தவ கள், வான் வெளிச்சத்தை யும் அணைத்து விட்டு அங்கி ருந்து சென்று மறைந்து விட் டனர் என்று தெரிவிக்கப்படு கிறது. (இ)

### யாழ். பாதுகாப்பு..
(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் திரு. கணே சன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிபர் தெரி விக்கும் தகவல்களின் படி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்களை அவர்கள் விரும்பி னால் மீண்டும் அங்கு அனுப்ப ஒழுங்குகள் செய்யப்படும்.

யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்பு நிலை மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பலருக்கு யாழ்ப் பாணம் செல்ல விருப்ப மில்லை. பலர் கொழும்பு செல்லவே முயற்சி எடுக்கின் றனர்''

[illegible] (இ-10)



## தென் ஆபிரிக்காவுக்கு கிடைத்த 4 ஆவது வெற்றி

ரைடன் கிண்ணமுக்கோண கிரிக்கெட் போட்டியில் நேற்று தென் ஆபிரிக்கா தொடர்ச்சியாக நான்காவது வெற்றியை ஈட்டியது.

ஆஸ்திரேலியாவை நாகர் சிங் விளையாட்டு அரங்கில் 2 விக்கெட்டுக்களால் அது வெற்றிவாகை சூடியது.

அனைவரும் ஆட்டமிழந்து ஆஸ்திரேலியா 47 3 ஓவர் களில் 215 ஓட்டங்களை எடுத்ததைத் தொடர்ந்து தென் ஆபிரிக்கா துடுப்பெடுத் தாடி 8 பேர்களை இழந்து 218 ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது.

இப்போட்டித் தொடரில் 4 வெற்றிகளை ஈட்டி தென் ஆபிரிக்கா முன்னணி வகிப்ப துடன் இந்தியா ஒரு.வெற்றி யீட்டி இரண்டாவது இடத்தை வகிக்கிறது. (இ-4)

## வயது குறைந்த ரெஸ்ட் கிரிக்கெட் ஆட்டக்காரர்

சிம்பாப்பே, ஒக். 26

சிம்பாப்பேக்கும் பாகிஸ்தா னுக்கும் இடையில் நேற்று ஆரம்பமான 2 ஆவது ரெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியில் 14 வயது நிரம்பிய ஹஸன் ராஜாவும் இடம் பெற்றுள் ளார்.

இதன் மூலம் உலகிலேயே வயது குறைந்த ரெஸ்ட் கிரிக்கெட் ஆட்டக்காரர் என்ற பெயரை இவர் பெறு வதாகத் தெரிவிக்கப்படு கிறது.

பாடசாலை மாணவரான இவரின் வயது 14 வருடங்கள் 238 நாள்கள்.

இதற்கு முன்வரும் இது போன்ற சாதனையை நிலை நாட்டியவரும் ஒரு பாகிஸ் தானியரே.

1959 ஆம் ஆண்டில் முஸ் தாக் முகம்மது என்பவர் ரெஸ்ட் கிரிக்கெட்டில் விளை யாடினார். அப்போது அவ ருக்கு வயது 15 வருடம் 124 நாள்கள். (இ-10)

## கள்ளநோட்டு

அண்மையில் கொழும்பில் தமிழர் ஒருவரிடமிருந்து கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்படும் ஆயிரம் ரூபா கள்ளநோட்டு சென்னையில் அச்சிடப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதாக பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு தெரிவித்துள் ளார். (இ-10)


# NEW SCIENCE COLLEGE

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(இராசா டீசல் அருகில்)

## O/L 96

அலகுரீதியான துரித மீட்டல்

விஞ்ஞானம் — எஸ், சுபசீலன்
ஆங்கிலம் — ஏ. எஸ் பிரசாத்

ஆரம்பம்: **28-10-96**
பிற்பகல் 4-00 மணிக்கு விஞ்ஞானம்
**29-10-96**
பிற்பகல் 4-00 மணிக்கு ஆங்கிலம்

(43351)


# கண்ணீர் அஞ்சலி

## செல்வி கிருஷாந்தி குமாரசாமி

தாயார், சகோதரர், அயலவர்
அக்கா, எங்கு சென்றீர்? கண்களில் கண்ணீரும்
நெஞ்சில் உதிரமும் சொட்ட ஏங்கி நிற்கிறோம்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மாணவிகள் **O/L 96**
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
(43355)

# மரண அறிவித்தல்

## இராசையா கந்தவனம்

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த இரா சையா கந்தவனம் அவர்கள்(முன்னாள் இளைப்பாறிய ஆசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) 24-10-96 வியாழக்கிழமை உடுப்பிட்டியில் காலமா னார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-10-96 வெள்ளிக்கிழமை வல்லை மயானத்தில் நடைபெற் றன என்பதை எல்லோருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
இமையாணன், மகன்:- க.தருமசோதி
உடுப்பிட்டி. மருமகன்:-கி.பாலச்சந்திரன
(கிராம அலுவலர்)
மகள்:-பா.பத்மலோசினி

(43360)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/8 இலக் கத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 26 10 1996 இல் அச் சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org